புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==========================================================================

# சோழர்களின் பெருமையைப் பறைசாற்றும் ராஜராஜ சோழன்

======================================================================

**முனைவர் ஆ. பிரபு**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**தூய நெஞ்சக் கல்லூரி தன்னாட்சி**
**திருப்பத்தூர் - 635 601**
**திருப்பத்தூர் மாவட்டம்**

**பெ.பூந்தமிழ்**
322PHD242F289TAM
**முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை**
**தூய நெஞ்சக் கல்லூரி தன்னாட்சி**
**திருப்பத்தூர் - 635 601**
**திருப்பத்தூர் மாவட்டம்**

**(திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

**ஆய்வுச் சுருக்கம்**

“சோழ நாடு சோறுடைத்து” என்னும் சிறந்த பழமொழிக்கேற்ப அந்நாடு எவ்வளவு சிறப்பாக விளங்கியிருக்கிறது, அந்நாட்டின் ஆட்சியைப் பார்த்தாலே நம்மால் தெரிந்து கொள்ள இயலும். ஒரு நாட்டில் மிகச்சிறந்த மன்னன் வாழ்ந்தான் என்பதை அந்நாட்டின் கல்வெட்டுகளும், கோவில்களுமே சான்று. அந்த வகையில் ராஜராஜ சோழனின் சிறப்புகளையும், பெருமைகளையும் தெரிந்துக்கொள்ள இன்று வரையிலும் பல கல்வெட்டுகளும், கோயில்களும் உள்ளன.

**முன்னுரை**

தொல்லியியல்(Archaeology) என்பதும் வரலாற்றியல் ஆய்வுகள் என்பதும் நமக்கு முன்னால் வாழ்ந்த பழங்காலச் சமுதாயம் விட்டுச் சென்ற ஆயுதங்கள், அணிகலன்கள், மண்பாண்டங்கள், கருவிகள் முதலியவைப் பற்றி ஆராய்ந்து அறிவியல் அடிப்படையில் விளக்குவதாகும். அவ்வாறு தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் இராஜராஜ சோழனின் பல கல்வெட்டுகளும், செப்பேடுகளும் அவரின் ஆட்சி முறையையும், அவரின் சிறப்புகளையும் தெரிவிக்கின்றது. சிறந்து விளங்கிய மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் இராஜராஜ சோழனு ஆவார். அவரின் பெருமைகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**இராஜராஜ சோழன்**

சோழப் பேரரசின் மிகச்சிறந்த ஆட்சியாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் ராஜராஜ சோழன் ஆவார். அவரது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு மேலும் விரிவடைந்தது. பொருளாதாரம் மற்றும் கலாச்சார ரீதியாகச் சிறந்து விளங்கியது. இவர் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில் இன்று வரையில் மக்களால் பிரம்மிக்க வைக்கும் அதிசயமாக விளங்குகிறது. இதன் மூலம் கட்டிடக்கலைக்கும் ஒரு சிறந்த பங்களிப்பைச் செய்தவர் ராஜராஜ சோழனாவார். தனது பேரரசை விரிவுப்படுத்த இராஜராஜ சோழன், கடல் கடந்து ஈழம்(இலங்கை), மாலத்தீவு போன்ற நாடுகள் வரை படையெடுத்து வெற்றிக்கொடியை பறக்கசெய்தார். விவசாயம் மற்றும் வணிகம் போன்றவற்றிலும் செழிப்பாக இருந்தது அவரது ஆட்சியில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இராஜராஜன் கலை மற்றும் இலக்கியத்தைப் பெரிதும் ஆதரித்தார். அவரது ஆட்சிக் காலத்தில் பல கோவில்கள் கட்டப்பட்டன. ராஜராஜா சோழன் ஒரு சிறந்த போர்வீரன், நிர்வாகி, கட்டிடக் கலைஞர், கலை மற்றும் இலக்கியத்தின் காவவர் என்பதை அறியலாம்.

**மும்முடிச் சோழனின் மெய்க்கீர்த்தி**

மெய்க்கீர்த்தி என்பது மன்னர்களின் ஆட்சியில் நடைப்பெற்ற முக்கிய நிகழ்வுகள், சாதனைகள் போன்றவற்றைப் பற்றிக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட புகழுரையாகும். இது மன்னர்களின் புகழைப் பரப்பவும், அவர்களின் ஆட்சிப் பதிவு செய்யவும் பயன்படுத்தப்பட்டது. இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி “திருமகள் போல” எனத் தொடங்கும் புகழுரையாகும். இது அவரது ஆட்சியில் அவர் அடைந்த வெற்றிகளையும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும் விவரிக்கிறது. ஒவ்வொரு மன்னர்களின் ஆட்சியில் நடந்த நிகழ்வுகளையும், எந்தக் கல்வெட்டு எந்த மன்னனுடையது என வேறுபடுத்தி அறியவும் மெய்க்கீர்த்திகள் மிகவும் உதவியாகவுள்ளன. இராஜராஜ சோழன்தான் மெய்க்கீர்த்தி முறையை முதன்முதலில் உருவாக்கிய பெருமைக்குறியவர். அவரது மெய்க்கீர்த்திகள் வரலாற்றுக் கருவூலங்களாக உள்ளன. சுருக்கமாகக் கூறினால், மெய்க்கீர்த்தி என்பது சோழர்களின் ஆட்சியில் மன்னர்களின் சாதனைகளைக் கல்வெட்டுகளாகப் பதிவு செய்யப் பயன்படுத்தப்பட்ட ஒரு முறையாகும். மேலும் இது சோழர்களின் வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு முக்கியச் சான்றாக அமைகின்றது.

**இராஜராஜ சோழனின் வெறுப்பெயர்கள்**

- ✓ ஷத்திரிய சிகாமணி,
- ✓ இராசேந்திர சிங்கன்,
- ✓ உய்யக்கொண்டான்,
- ✓ பாண்டிய குலாசினி,
- ✓ கேரளாந்தகன்,
- ✓ நித்த வினோதன்,
- ✓ ராசாசிரையன்,
- ✓ சிவபாதசேகரன்,
- ✓ சநநாதன்,
- ✓ சிங்களாந்தகன்,
- ✓ சயங்கொண்ட சோழன்,
- ✓ மும்முடி சோழன்,
- ✓ சோழேந்திர சிங்கன்,
- ✓ சோழமார்த்தாண்டன்,
- ✓ ராசா மார்த்தாண்டன்,
- ✓ தெலுங்குகுல காலன்,

- ✓ கீர்த்தி பாராக்கிரமன்.

**தஞ்சையின் பெருமை**

**"அடைந்தவர்க்கு அருளும் அப்பா, போற்றி!**

**இத்தி தன்னின்கீழ் இருமூவர்க்கு**

**அத்திக்கு அருளிய அரசே, போற்றி!**

**தென்நாடு உடைய சிவனே, போற்றி!**

**எந்நாட்டவர்க்கும் இறைவா, போற்றி!"**

- **திருவாசகம்**

என்று அந்த பரமசிவனையும், பழந்தமிழையும் மையமாகக்கொண்டு கட்டப்பட்ட தஞ்சை பெரியகோவில் ஆயிரம் ஆண்டுகளில் ஆறு முறை நிலநடுக்கம் கண்டும் கம்பீரமாய் நிற்கும் இந்தக் கோவில் கல்லில் வடிக்கப்பட்ட காட்சிப் பொருள் என்பதா? காலமே கண்டு வியக்கும் தமிழினத்தின் சாட்சிப் பொருள் என்பதா? என உலக அதிசயங்களே வியந்து பார்க்கும் அளவிற்கு வியப்பூட்டத்தக்க ஓர் அதிசயமாகவே திகழ்கிறது. இந்த கோவிலின் கட்டுமான தொழில்நுட்பமே நம்மை ஆச்சரியத்திற்குக் கொண்டு செல்லும் அளவிற்கு உள்ளது. தஞ்சை ஒரு பாறைகள் அற்ற சமவெளிப் பகுதியாகும். அங்கு கோவில் கட்ட அறுபதாயிரம் 'டன்' எடைகொண்ட பாறைகள் கொண்டுவரப்பட்டுள்ளது இன்றளவிலும் ஆராய்ச்சியாளர்களையே வியப்பூட்டச் செய்கிறது. இராஜராஜ சோழன் வீரன் என்பதையும் தாண்டி எவ்வளவு சிறந்த கட்டிடக் கலைவண்ணம் கொண்டவர் என்பதை இந்த ஒரு கோவிலே நமக்கு எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

1. **தஞ்சை பெருவுடையார் கோவிலை கட்டியவர்**

   மக்களிடையே குழப்பம் நிறைந்த கேள்வியாக இருந்தது தஞ்சை பெருவுடையார் கோவிலைக் கட்டியது யார்? என்பது. இந்த கேள்விக்கு யாரிடமும் தெளிவான ஓர் பதில் கிடைக்காததால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசத்தொடங்கினர். கரிகால் சோழன் தான் இக்கோவிலைக் கட்டினார் என்று ஒருபுறமும், வேற்றுகிரகவாசிகள் தான் இக்கோவிலைக் கட்டினார்கள் என்று மற்றொருபுறமும் பேசிக்கொண்டு இருந்தனர். இந்த சந்தேகங்கள் அனைத்திற்க்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக 1886 – ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தொல்லியல் துறை ஆராய்ச்சியாளரான யூஜின் ஜூலியஸ் தியோடர் ஹூல்ஸ்( Eugen Julius Theodor Hultzsch) இந்த மர்மத்திற்கான விடையை தேட தொடங்கினார். ஆராய்ச்சி தொடர்ந்து கொண்டேசென்றது, பத்து வருட ஆராய்ச்சிக்குப் பிறகு கோவிலின் கருவறைப் பகுதியில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் இருந்த தமிழெழுத்துக்களை ஆராய்ந்து இறுதியாக இதனைக் கட்டியவர் விசயாலயன் வழி வந்த வீரன், சுந்தரச் சோழனின் புதல்வன், மக்கள் போற்றும் மன்னன், அருள்மொழிவர்மன் என்னும் இராஜராஜ சோழன் என்பது கண்டறியப்பட்டது.

2. **கோவில் கட்டிய முறை**

   சோழர்கள் ஆட்சிப்பகுதியையும் எல்லைகளையும் விரிவுப்படுத்தும் வேலைகளில் போர்தொடுக்க கடல்கடந்து இலங்கை சென்ற இராஜராஜ சோழன் புத்த சமய கடவுளான புத்தர் சிலைகள் பிரம்மாண்டமாகவும், அளவில் பெரியதாகவும் இருந்ததை கண்டு சைவ சமய கடவுளான சிவனுக்கும் இதே போன்ற லிங்க வடிவ சிலையை கட்டவேண்டும் என்று எண்ணினார். அவரின் எண்ணங்களை பிரதிபலிக்கும் விதமாக காஞ்சி கைலாயநாத கோவில் இருந்தது. ஆனால், சிவலிங்கம் அவர் எதிர்பார்த்த அளவிற்கு இல்லாததால், மிகப்பெரிய சிவலிங்கத்தை கொண்ட கோவிலை கட்ட முடிவெடுத்தார். கோவிலின் கட்டுமானத்தைப் பூர்த்தி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைச்சிறந்த பொறியாளர்தான் குஞ்சிதமல்லன் பெருந்தச்சன் ஆவான். சோழ தேசத்தின் தலைநகரான தஞ்சையில், பெருவுடையார் கோவிலை

கட்ட முடிவு செய்தார் இராஜராஜன். அக்கோவிலின் கட்டுமான அளவும், திட்டமும் பிரம்மாண்டமாக இருந்ததால் அவரின் நாட்டு மக்களிடமே கோவிலைக்கட்ட உதவியை கேட்டார். அந்நாட்டு மக்களும் அவர்களால் முடிந்த உதவியைச் செய்ய மிகச்சிறப்பாகக் கோவிலின் பணி ஆரம்பித்தது.

இறுக்கமான செம்மண் கொண்ட தஞ்சையில் மலையும், பாறைகளும், இல்லாத இடத்திலிருந்து 80 கி.மீ தூரத்தில் உள்ள புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து 1600 டன் எடை கொண்ட பாறைகள் 3000 யானைகள் மூலமாகவும் 5000 குதிரை வண்டிகள் மூலமாகவும் 1000 மாடுகள் மூலமாகவும் கருங்கற்கள் தஞ்சைக்கு கொண்டுவரப்பட்டு, தலைச்சிறந்த சிற்பிகள் மூலமாக ஒவ்வொரு கற்களும் நேர்த்தியாகச் செதுக்கிக் கோவிலை 1003 – ஆம் ஆண்டு கட்ட ஆரம்பித்தனர். மிகவும் பிரம்மாண்டமாக ஏழு பனைமரம் உயரத்திற்கு கோபுரம் கட்டப்பட்ட போது தஞ்சையே இராஜராஜ சோழனை வியந்து பார்த்தது. 80 டன் எடை கொண்ட பிரம்ம மந்திரக்கல்லை எவ்வாறு அவ்வளவு உயரத்திற்கு கொண்டு சென்று வைத்திருப்பார்கள் என்பது இன்றளவிலும் பல ஆராய்ச்சியாளர்களால் வியந்து பார்க்கும் வண்ணம் உள்ளது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு பல நூற்றுக்கணக்கான மக்களின் உழைப்பால் 1010 – ஆம் ஆண்டு தஞ்சை பெருவுடையார் கோவில் கட்டிமுடிக்கப்பட்டது. இக்கோவிலை கட்ட உதவிய அனைவரின் பெயருமே ஒவ்வொரு சுவரிலும், ஒவ்வொரு தூணிலும் என அனைத்து இடங்களிலும் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டது.

“நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க….” (கல்வெட்டுச் செய்தி) என்ற இந்த கல்வெட்டு வாசகத்திற்கு பிறகுதான், யார் யார் எந்த கொடையை வழங்கினார்கள் என்று கல்வெட்டினை வெட்டத் தொடங்கினர். அக்கோவில் சோழர் காலத்தில் வெறும் கோவிலாக மட்டுமல்லாமல், வியாபார பகுதியாகவும், தங்கம் மற்றும் சிலைகளைப் பாதுகாக்கும் ஒரு வங்கியாகவும் இருந்துள்ளது.

### 3. பெருவுடையார் கோவிலும், தமிழெழுத்துக்களும்

தமிழ் மீது மிகுந்த பற்றைக் கொண்ட இராஜராஜ சோழன், தான் கட்டிய கோவிலிலும் அப்பற்றை வெளிப்படுத்தியது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கோவில் வைக்கப்பட்ட சிவலிங்கத்தின் உயரம் பண்ணியிரண்டு(12) அடி, தமிழில் உயிர் எழுத்துக்கள் பண்ணியிரண்டு(12). சிவலிங்க பீடம் பதினெட்டு(18) அடி, தமிழில் உள்ள மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை பதினெட்டு(18). கோபுரத்தின் உயரம் இருநூற்று பதினாறு(216) அடி, தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை இருநூற்று பதினாறு(216). சிவலிங்கத்திற்கும் நந்திக்கும் இடையே உள்ள தூரம் இருநூற்று நாற்பத்தேழு(247), தமிழில் உள்ள மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை இருநூற்று நாற்பத்தேழு(247) ஆகும். இதன் மூலம் இராஜராஜ சோழன் ஒரு சிறந்த தமிழ்ப் பற்று கொண்டவர் என்பது தெரிகிறது.

### முடிவுரை

சிறந்த ஆட்சியையும், சிறப்பான ஒரு ஆளுமையையும் தலைசிறந்த ஒரு அரசனால் மட்டுமே அளிக்க முடியும். அந்த வகையில் இராஜராஜ சோழனும் தலைசிறந்த ஒரு அரசனாக வாழ்ந்துள்ளார் என்பதை நம்மால் அறிந்துகொள்ளமுடிகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும், இன்றளவிலும் மக்களால் போற்றும் வண்ணம் இராஜராஜ சோழனின் பெருமை இருக்கிறது என்றால் அது நமது தமிழ்நாட்டிற்கே கிடைத்த பெருமையாகும். தஞ்சையின் பெருமையையும், பெருவுடையார் கோவிலையும், இராஜராஜ சோழன் தமிழ் மீது வைத்திருக்கும் பற்றினையும் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. சோழர்களின் ஆட்சியில் சிறப்பான ஆட்சியையும், புகழையும் பிடித்த பெருமை இராஜராஜ சோழனுக்கே உரியதகும்.

**துணை நூற்பட்டியல்**


1. பிற்காலச் சோழர் சரித்திரம் – சதாசிவப் பாண்டாரத்தார்
2. தமிழக வரலாறும் பண்பாடும் – வே. தி. செல்வம்
3. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் – கே. கே. பிள்ளை
4. திருவாசகம் – கா. சு. பிள்ளை
5. இராஜராஜ சோழன் (இன்றைய பொய்களும் நேற்றைய வரலாறும்) – இரா. மன்னர் மன்னன்